සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

| 11 | T | I, II |
|---|---|---|

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
**General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)**

බුද්ධ ධර්මය **I, II**
**பௌத்தம் I, II**
Buddhism **I, II**

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## பௌத்தம் I

**அறிவுறுத்தல்கள் :**

- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- ※ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் நீங்கள் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
- ※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** சித்தார்த்தரான போதிசத்துவர் தான் அனுபவிக்கும் சுகபோக உலகியல் வாழ்க்கை நிரந்தரமான உண்மை அல்ல என்பதை முதன்முறையாக உணர்ந்து கொண்டது,
(1) நடிக நடிகையர்களின் அவலட்சண நிலைகளைக் கண்டதாலாகும்.
(2) வழிநடுவில் துறவி ஒருவரை கண்டதினாலாகும்.
(3) இராகுல இளவரசன் பிறக்கப் போவதைக் கேட்டதாலாகும்.
(4) முதுமை, நோய், இறப்பு என்பவற்றின் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டதாலாகும்.

**2.** புத்தர் பெருமானின் முதல் உதானயவுக்கு அமைய, அவருக்கு முன்னைய பிறவிகளில் பிறந்து முதுமை, மரணம் (ஜரா மரண) ஆகிய துன்பங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டதன் காரணம்
(1) தன்ஹா　(2) மான
(3) துவேஸ　(4) கர்ம விபாக

**3.** "ரகசத் பவ் நொகொட - கெலெசரயனுத் துறுகொட" இந்த செய்யுள் வரிச்சோடியால் குறிப்பிடப்படுவது புத்தர் பெருமான் கொண்டிருந்த எந்தப் பண்பு ஆகும்?
(1) அரஹங்　(2) சம்மா சம்புத்த　(3) லோகவிதூ　(4) பகவா

**4.** புத்தர் பெருமானின் 'சுகத' என்ற பண்பினது கருத்தை **வெளிப்படுத்தாத** கூற்று எது?
(1) 'ஆர்ய மார்க்கத்தில் பயணித்தல்'
(2) 'மேலான பேரானந்த நிர்வாண பேறடைதல்'
(3) 'இப்பிறவிக்கும் மறு பிறவிக்குமான நன்மை தரும் நல்வார்த்தைகளைப் பேசுதல்'
(4) 'அனைத்து மரியாதைகளுக்கும் தகுதியாகுதல்'

**5.** "நானே முழுமை ஞானம் பெற்ற புத்தர். நானே அதியுயர் சத்திரசிகிச்சையாளர்." புத்தரின் இக்கூற்றினால் குறிப்பிடப்படுவது புத்தர்,
(1) நோயாளிகளைப் பராமரித்தலை உதாரணமாகச் செய்துகாட்டினார் என்பதாகும்.
(2) மனிதர் மனதில் உள்ள ராக போன்ற மாசுகளை முழுமையாக அழித்து விட்டார் என்பதாகும்.
(3) வைத்தியம் போலவே பராமரிப்பையும் நன்றாகச் செய்தார் என்பதாகும்.
(4) சத்திரசிகிச்சை செய்யும் வைத்தியர் ஒருவர் என்பதாகும்.

**6.** சித்தார்த்த போதிசத்துவர் பூரணத்துவத்தை (பாரமிதா) நிறைவு செய்த முறையினை ஜாதக கதைகள் எடுத்துக்காட்டுகின்றன. இதற்கமைய இவரின் ஒரு பாரமிதாவின் நிறைவையும் அதனைக் குறிப்பிடும் ஜாதகக் கதையையும் காட்டும் சரியான விடையைத் தெரிவுசெய்க.
(1) உபேக்ஷா பாரமிதா - கபி ஜாதக　(2) மைத்திரி பாரமிதா - வட்டக ஜாதக
(3) நெக்கம்ம பாரமிதா - மகாதேவ ஜாதக　(4) அதிஷ்டான பாரமிதா - லோமஹம்ச ஜாதக

[பக். 2 ஐப் பார்க்க

**7.** நிற்றல், இருத்தல், நடத்தல் ஆகிய அனைத்து செயற்பாடுகளிலும் புரிந்துணர்வைக் கொண்டிருத்தல், சமத பாவனாவில் அமரும் போது இருக்க வேண்டிய அடிப்படைப் பண்பு ஆகும். இது இனங்காணப்படுவது,
(1) இந்திரிய சங்வர (2) சதி சம்பஜக்ஞ (3) நிசம்மகாரி (4) பிரம்மச்சரிய

**8.** தன்னை உதாரணமாகக் கொண்டு பிறர் பற்றி சிந்திப்பதற்கும் செயற்படுவதற்கும் அறிவுரை வழங்கும் தர்ம பழக்கம்
(1) அத்துபநாயிக (2) அத்தஜ்ஜாசய (3) தம்மாதிபதி (4) லோகாதிபதி

**9.** இடைவிடாத முயற்சியுடன், கை கால்களின் களைப்புடன், வியர்வை சிந்த, தரும நெறியில் சேகரித்த செல்வத்தை சரியான விதத்தில் கையாளும் தர்மம் இனங்காணப்படுவது,
(1) அத்தீ சுக (2) போக சுக (3) அனண சுக (4) அனவஜ்ஜ சுக

**10.** "விலங்குகள், தனியாள், பொருள்கள் முதலிய எந்தவொரு உயிருள்ள உயிரற்ற பொருள்களும் தோன்றுதல், அழித்தல் எனும் இயல்பைக் கொண்டுள்ளன." இப்பண்பு பௌத்த சமயத்தில் இனங்காணப்படுவது,
(1) தததா (2) விதததா (3) அனித்தியதா (4) விசமதா

**11.** தொழில் வழங்குநரினால் தொழில் புரிபவர்க்கு நிறைவேற்றப்பட வேண்டிய ஐந்து கடமைகள் சிகாலோவாத சூத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அந்தக் கடமைகளுக்கு உரியது **அல்லாத** விடயம்,
(1) வேலையாளின் சக்தி அளவுக்கு ஏற்ப வேலையை ஒப்படைத்தல்
(2) பொருத்தமான விதத்தில் உணவு மற்றும் வேதனம் வழங்குதல்
(3) சுகாதார வசதிகள் வழங்குதல்
(4) அவமதிப்பு செய்யாதிருத்தல்

**12.** கோபம், பகைமை, துவேஷம், குரோதம் ஆகிய பெயர்களினால் இனங்காணப்படும் நீவரண தர்மம் எது?
(1) காமச்சந்த (2) வியாபாத (3) தீனமித்த (4) விசிகிச்சா

**13.** அனுலோம பட்டிச்ச சமுப்பாத கற்பித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி "பிரதிசந்தி சித காரணமாக பஞ்சஸ்கந்தய ஏற்படும்" என்பது வெளிப்படுத்தப்படுவது,
(1) "அவிஜ்ஜா பச்சயா சங்காரா" எனவாகும். (2) "விக்ஞான பச்சயா நாமரூபங்" எனவாகும்.
(3) "நாமரூப பச்சயா சலாயத்தனங்" எனவாகும். (4) "உபாதான பச்சயா பவோ" எனவாகும்.

**14.** தனியாள் வேறுபாடுகள் ஏற்படுவதற்கான காரணம் கர்மம் என விளக்கி தோதேய புத்திர சுபமானவகயாவுக்கு உபதேசம் செய்த சூத்திரம் எது?
(1) பத்தகம்ம சூத்திரம் (2) சுல்லகம்ம விபங்க சூத்திரம்
(3) தக்கிணா விபங்க சூத்திரம் (4) சச்ச விபங்க சூத்திரம்

**15.** வாழ்க்கையின் பழக்கமாகச் செய்யும் குசலாகுசல கர்மம் மற்றும் முற்பிறவியில் செய்ததும் எப்போதும் நினைவு செய்யப்படுவதுமான குசலாகுசல கர்மம் இனங்காணப்படுவது,
(1) கருக கர்மம் எனவாகும். (2) ஆசன்ன கர்மம் எனவாகும்.
(3) ஆசிண்ண கர்மம் எனவாகும். (4) கடத்தா கர்மம் எனவாகும்.

**16.** சந்தர்ப்பத்துக்கேற்ற அறிவுடனும் ஊக்கத்துடனும் செயற்படுவதால் தாம் எதிர்கொள்ள நேரிடும் அகுசல வினைப் பயன்களைத் தவிர்த்துவிட முடியுமென தர்மத்தில் குறிப்பிடப்படுவது,
(1) கதி சம்பத்தி (2) உபதி சம்பத்தி (3) கால சம்பத்தி (4) பயோக சம்பத்தி

**17.** பத்துவகை அகுசல கம்மாவில் மனோ கம்ம தொகுதிக்கு உரித்து **அல்லாத** அகுசல கம்ம எது?
(1) விசிகிச்சா (2) அபித்யா (3) வியாபாத (4) மித்யாதிருஷ்டி

**18.** விலங்கு, மனிதர், நான், ஆத்மா ஆகியன சம்பிரதாய வசனங்கள் மட்டுமே எனவும், இவை அனைத்தும் மாற்றமடையக் கூடியவை, துக்கத்தைக் கொண்டிருப்பவை, ஆத்மா அல்லாதவை எனவும் வெளிப்படுத்தப்படுவது
(1) திரிலக்ஷணவில் (2) திரி வித்யாவில் (3) பஞ்ச நியாமவில் (4) திரி சிக்ஷாவில்

**19.** "யாதேனும் ஒரு செயலைச் செய்வதால் மனம் வருந்த நேர்ந்தாலும், வினைப் பயனால் கண்ணீர் நிறைந்த முகத்துடன் அழ நேரிட்டாலும் அத்தகைய செயலைச் செய்யாதிருத்தல் நன்மை தருவதாகும்." இந்தக் கருத்து உள்ளடங்கிய தம்மபத காதாவின் முதல் இரு வரிகளும்
(1) "நதங் கம்மங் கதங் சாது - யங் கத்வா அனுதப்பதி"
(2) "தஞ்ச கம்மங் கதங் சாது - யங் கத்வா நானுதப்பதி"
(3) "சுகரானி அசாதூனி - அத்தனொ அபிதானிச்ச"
(4) "அக்கொச்சி மங் அவதி மங் - அஜனி மங் அஹாசி மே"

[பக். 3 ஐப் பார்க்க

0114

**20.** புத்தர் பெருமான் பஞ்ச பலி என்னும் ஐந்து கடமைகளை எந்த சூத்திரத்தில் யாருக்கு உபதேசம் செய்தார்?
(1) பத்தகம்ம சூத்திரத்தில் அனேபிண்டு பிரபுவுக்கு
(2) அனண சூத்திரத்தில் அனேபிண்டு பிரபுவுக்கு
(3) கூட்டதன்த சூத்திரத்தில் கூட்டதன்த பிராமணனுக்கு
(4) வியாக்கபஜ்ஜ சூத்திரத்தில் தீகஜானு கோலிய புத்திரனுக்கு

**21.** பஞ்ச பலி கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தனது உறவினர்களுக்குரிய கடமைகளை நிறைவேற்றுதல் இனங்காணப்படுவது,
(1) ஞாதி பலி (2) அதிதி பலி (3) புப்பபேத பலி (4) தேவதா பலி

**22.** புத்தர் பெருமான் காலாம வாசிகளுக்கு எந்தவொன்றையும் உடனடியாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று போதித்த விடயங்களுள் **உள்ளடங்காதது,**
(1) 'செவி வழிச் செய்தி என்பதால்' (2) 'மரபு வழியாக வருவதனால்'
(3) 'தருக்கரீதியான காரணத்தினால்' (4) 'விமர்சனம் செய்ய முடியாத காரணத்தினால்'

**23.** ஒற்றுமையுடனும் மகிழ்ச்சியுடனும் சேர்ந்து சண்டைகள், பிரச்சினைகள் மேற்கொள்ளாது பாலும் நீரும் போல ஒன்றாகக் கலந்து, ஒன்றிணைந்து, ஒருவரோடொருவர் அன்பான மனப்பாங்கோடு வாழுதல் பௌத்தத்தில் இனங்காணப்படுவது,
(1) பரிவு (சஹகம்பனய) (2) ஒத்துழைப்பு (சஹயோகய)
(3) ஒன்றிணைந்த வாழ்வு (சஹஜீவனய) (4) அனுதாபம் (சஹானுபூதிய)

**24.** பல்வேறு இனம், சமயம், கலாசாரம் உள்ள மக்கள் சமூகத்தில் வாழும்போது, ஒற்றுமையுடனும் சமாதானத்துடனும் வாழ்வதற்கு உதவுகின்ற பௌத்த போதனைகள் அடங்கிய தெரிவு எது?
(1) சிவ்சஸ், சிவ் சங்கராவத் (2) சிவ் சங்கராவத், சிவ் பம்ப விஹரண
(3) சிவ் பிலிசிம்பியா, சிவ் பம்ப விஹரண (4) சிவ்பஸய, சிவ்சஸ்

**25.** "சத்வயா என்பது ஸ்கந்தவின் தொகுப்பாகும்" என்ற ஸ்கந்த பகுப்பாய்வின்படி பதவி போன்ற நான்கு மஹா பூதங்கள் உரித்தாவது,
(1) ரூப ஸ்கந்தவிற்கு (2) வேதனா ஸ்கந்தவிற்கு
(3) சக்ஞா ஸ்கந்தவிற்கு (4) சங்கார ஸ்கந்தவிற்கு

**26.** பின்வாங்குதல் இல்லாத வீரத்துடன், விழிப்புணர்வுடன், மூன்று வாசல்களின் தூய்மையுடன், பூரண அறிவுடன் செயற்படுகின்ற தனிநபரின் புகழ் வளர்ந்து செல்லும் எனக் குறிப்பிடும் தம்மபத காதாவின் முதல் இரு வரிகள்
(1) "அசரித்வா பிரம்ம சரியங் - அலத்தா யொப்பனே தனங்"
(2) "உத்தானவதோ சதிமதோ - சுசிகம்மஸ்ஸ நிசம்மகாரினோ"
(3) "அப்பமாதோ அமதபதங் - பமாதோ மச்சுநோபதங்"
(4) "சுகராணி அசாதூனி - அத்தனோ அபிதானிச்ச"

**27.** படிச்ச சமுப்பாத கோட்பாட்டுக்கு அமைய பேராசை காரணமாக சமூகத்தில் பிணக்குகளும் பல்வேறு முரண்பாடுகளும் ஏற்படும் முறையினை விளக்கும் சூத்திர போதனை
(1) மஹா சமய சூத்திர (2) மஹாபரிநிப்பான சூத்திர
(3) மஹா நிதான சூத்திர (4) மஹாபதான சூத்திர

**28.** தச சக்விதிவத்களுக்கு உரிய விடயம் **அல்லாதது,**
(1) நாட்டைப் பாதுகாக்கும் படையணிக்குப் பாதுகாப்பு ஒழுங்குசெய்தல்
(2) நாட்டில் அதர்மமான செயல்கள் இடம்பெறாதபடி நடவடிக்கை மேற்கொள்ளுதல்
(3) ஏழை மக்களுக்கு செல்வம் வழங்குதல்
(4) பெண்களுக்கான பாதுகாப்பை ஒழுங்குபடுத்தல்

**29.** விதைக்க வேண்டிய விதை போல அறிமுகம் செய்யப்பட்டுள்ள, மும்மணிகளின் பண்புச் சிறப்புப் பற்றி எங்கள் மனத்தில் ஏற்படும் நம்பிக்கை அறிமுகப்படுத்தப்படுவது,
(1) பக்தி (2) ஸ்ரத்தாவ (3) சமாதி (4) பிரசாதய

**30.** பஞ்ச நீவரண தர்மத்தில் காட்டப்பட்டுள்ளபடி பித்த நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவருக்கு உணவின் எந்தவொரு சுவையும் தெரியாதிருப்பது போல, நல்லது கெட்டது எதனையும் இனங்காண முடியாதிருப்பதன் காரணம்
(1) காமச்சந்தவினால் ஆகும். (2) வியாபாதவினால் ஆகும்.
(3) தீனமித்தயவினால் ஆகும். (4) விசிகிச்சாவினால் ஆகும்.

[பக். 4 ஐப் பார்க்க

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

**31.** சம்மா தித்தி ஐந்து விதமாகப் பிரித்துக் காட்டப்படும்போது அனைத்தையும் நிலையாமை (அனித்திய), துக்கம் (துக), அனாத்ம எனக் காணுதல் இனங்காணப்படுவது,
(1) கம்மஸ்ஸகதா சம்மா தித்தி (2) தியான சம்மா தித்தி
(3) விதர்சனா சம்மா தித்தி (4) மார்க சம்மா தித்தி

**32.** சீயம் தேசத்திலிருந்து உபாலி தேரர் உட்பட இருபத்தொன்பது பேர் வருகை தந்து உபசம்பதா ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்திய பின்னர் இலங்கையில் புதிய சாசன மறுமலர்ச்சி ஆரம்பமானது,
(1) கீர்த்தி ஸ்ரீ மேகன் ஆட்சிக் காலத்தில் (2) விமலதர்மசூரியன் ஆட்சிக் காலத்தில்
(3) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் ஆட்சிக் காலத்தில் (4) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் ஆட்சிக் காலத்தில்

**33.** 'கதாவத்துப்பகரணய' என்ற நூல் தொகுக்கப்பட்டு அபிதம்ம பிடகவுடன் உள்ளடக்கப்பட்டது
(1) மகா காசியப்ப மகா தேரரினால் (2) சப்பகாமி மகா தேரரினால்
(3) சம்புத்த மகா தேரரினால் (4) மொக்கலிபுத்த திஸ்ஸ மகா தேரரினால்

**34.** மூன்றாம் பௌத்த மகாநாட்டின் விளைவாக புதிய நாடுகளில் பௌத்தம் தாபிக்கப்படும்போது அந்தப் பிரதேசங்களுக்கு ஈடுபடுத்தப்பட்ட சமய தூதுவர்களையும் அவர்கள் சென்ற பிரதேசங்களையும் குறிப்பிடும் சரியான விடையைத் தெரிவுசெய்க.
(1) மகாதேவ தேரர் - ஹிமவந்த பிரதேசம் (2) மஜ்ஜிம தேரர் - யோனக ரத்த
(3) ரக்கித தேரர் - வனவாசி தேசம் (4) மஹாரக்கித தேரர் - அபரத்ன தேசம்

**35.** அனுராதபுரத்தின் தூபாராம, களனி விகாரையின் தூபி என்பன முறையே எந்தத் தூபி வடிவமைப்புக்கு ஏற்ப கட்டப்பட்டுள்ளன?
(1) புப்புளாகார - கண்டாகார (2) தானியாகார - புப்புளாகார
(3) கண்டாகார - தானியாகார (4) கண்டாகார - கடாகார

**36.** தூபியின் கர்ப்பத்துடன் தொடர்புடையதாக நான்கு திசைகளையும் பார்க்கும் விதத்தில் அமைக்கப்படும் தோரணம் போன்ற அமைப்பு எவ்வாறு இனங்காணப்படுகின்றது?
(1) தேவதா பகுதி (2) கொரவக்கல் (3) வட்டதாகே (4) வாகல்கட

**37.** உலகை வியக்க வைக்கும் பல்வேறு கலை ஆக்கங்கள் கொண்ட புனித இடங்களைப் பாதுகாக்கும் பொருட்டு மாணவர்களான எங்களால் செய்யப்பட வேண்டிய முக்கியமான கடமை
(1) கலைப் படைப்புகளை சுற்றுலாப்பயணிகளுக்குக் காட்டுதல்
(2) கலைப் படைப்புகளுக்கு மதிப்பளித்து பிரசாரம் செய்தல்
(3) புனித இடங்களில் இருக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு உதவி செய்தல்
(4) கலைப் படைப்புகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தடுத்தல்

**38.** அனுராதபுரத்து மகாமேகவண்ணப் பூங்காவில் அமைந்துள்ள புகழ்பெற்ற சமாதி புத்தர் சிலையில் வெளிப்படும் கை முத்திரை யாது?
(1) தியான முத்திரை (2) அபய முத்திரை
(3) விதர்க்க முத்திரை (4) தர்ம சக்கர முத்திரை

**39.** எந்தவொரு காரணத்துக்காகவும் நாட்டு மக்களுடன் கோபம், பகைமை ஏற்படுத்திக் கொள்ளாது அனைத்து நாட்டு மக்களையும் தமது பிள்ளைகளைப் போல நினைத்து நடவடிக்கை மேற்கொள்ளும் தச ராஜ தர்மம் அறிமுகப்படுத்தப்படுவது,
(1) மிருதுவான என்னும் பெயரால் (2) தபச என்னும் பெயரால்
(3) அக்குரோதய என்னும் பெயரால் (4) அவிரோததாவ என்னும் பெயரால்

**40.** உள்நாட்டு வெளிநாட்டு சித்திரப்பாங்கின் பண்புகளைக் கொண்டதாக களனி விகாரையின் புதிய விகாரை மண்டபத்தில் சித்திரங்களை வரைந்த கலைஞரின் பெயர் யாது?
(1) திரு. எம். சர்ளிஸ் (2) திரு. சோலிஸ் மென்டிஸ்
(3) திரு. ஜோர்ஜ் கீற் (4) திரு. சோமபந்து வித்யாபதி

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

[பக். 5 ஐப் பார்க்க

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**11 T I, II**

0114

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

බුද්ධ ධර්මය I, II
பௌத்தம் I, II
Buddhism I, II

## பௌத்தம் II

- ✳ **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ✳ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** (i) நாலாகிரி யானையை அடக்கியதால் வெளிப்படுத்தப்படும் புத்தரின் பண்பு எது?

(ii) புத்தர் பெருமான் முதலாவது மற்றும் பத்தாவது மழைக்காலத்தைக் கழித்த இடங்களின் (வஸ்ஸவஸ) பெயர்களைக் குறிப்பிடுக.

(iii) கம்மதான (தியான பாடங்களை) வழங்கும்போது கவனத்தில் கொள்ளப்படும் தனிநபர் நடத்தை வகைப்படுத்தலுக்குரிய **இரண்டு** நடத்தைகளை எழுதுக.

(iv) ‘அனன சுகய’ என்பதன் கருத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(v) “ஆரோக்ய பரமா லாபா - சந்துட்டி பரமங் தனங்” இந்த காதா வரிகளின் கருத்தை எழுதுக.

(vi) நான்கு மேலான வசிப்பிடங்களின் (பிரம்ம விகார) பெயர்களைக் குறிப்பிடுக.

(vii) சிகாலோவாத சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு ஏற்ப துறவிகளினால் இல்லறவாசிகளுக்கு நிறைவேற்றப்பட வேண்டிய **இரண்டு** கடமைகளை எழுதுக.

(viii) பௌத்தத்தில் குறிப்பிடப்படும் நால்வகைக் குழுவின் பெயரைக் குறிப்பிடுக.

(ix) திட்டதம்மவேதனீய கர்ம என்பதன் கருத்தைக் குறிப்பிடுக.

(x) அபயகிரி, ஜேத்தவன ஆகிய தூபிகளைக் கட்டிய **இரண்டு** மன்னர்களினதும் பெயர்களை ஒழுங்குமுறையில் எழுதுக.

**2.** (i) மேலான எண் வகை மார்க்கத்துக்குரிய மார்க்க அம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ii) மேலான எண்வகை மார்க்கத்தை திரிசிக்ஷா என்பதற்கு ஏற்ப வகைப்படுத்திக் காட்டுக.

(iii) இல்லற வாழ்க்கையின் வெற்றிக்கு மேலான எண்வகை மார்க்கங்களைப் பிரயோகிக்கக்கூடிய முறையினை விளக்குக.

**3.** (i) “அத்தனாவ கதங் பாபங்” என்ற தம்மபத செய்யுளை முழுமையாக எழுதுக.

(ii) இந்தச் செய்யுளின் கருத்தை எழுதுக.

(iii) பௌத்தம் நல்ல, கெட்ட செயல்களின் பொறுப்பைத் தனிநபரிடமே ஒப்படைத்துள்ளது என்பதை விளக்குக.

**4.** (i) பராபவ சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சீரழிவுக்கான விடயங்கள் **இரண்டினை** எழுதுக.

(ii) மங்கல சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செழிப்பு, மகிழ்ச்சி பற்றிய விடயங்கள் (மங்கள கரண) **மூன்றினைச்** சுருக்கமாகக் குறிப்பிடுக.

(iii) தனிநபர் வாழ்க்கையின் வீழ்ச்சியைத் தவிர்த்து வெற்றியைப் பெறுவதற்கு மங்கல சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பிரயோகிக்கக்கூடிய முறையினை விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

5. (i) புத்தரின் உருவச் சிலைகளில் காணக்கூடிய **இரண்டு** நிலைகளின் (ஆசனங்கள்) பெயர்களைத் தருக.

(ii) சந்திர வட்டக்கல் பற்றி சுருக்கமான விளக்கம் தருக.

(iii) இலங்கைக் கலைஞர்களின் கலைத்திறனை புத்தரின் உருவச் சிலைகளைக் கொண்டு விளக்குக.

6. (i) முதலாவது பௌத்த மகாநாட்டுக்குக் காரணமான சுபத்திர பிக்குவின் ஒழுக்கமற்ற கூற்றினை எழுதுக.

(ii) அந்த மகாநாடு நடத்தப்பட்ட இடம், தலைமைத்துவம் ஏற்று செயற்பட்ட மகாதேரர் மற்றும் அனுசரணை வழங்கிய அரசர் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிடுக.

(iii) பௌத்த மகாநாட்டின் முக்கிய நோக்கம் சாசனத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகும் என்பதை முதலாவது மகாநாட்டினைக் கொண்டு விளக்குக.

7. பின்வரும் தலைப்புகளில் **இரண்டினுக்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) துட்டகைமுனு மன்னன்

(ii) திரிலக்ஷண

(iii) வீரிய பாரமிதா

(iv) கண்டி காலத்தில் ஓவியக்கலை

❊❊❊

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න






කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්

PADANAMA PUBLICATION | pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | T | සුභාර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

**සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට**

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**